BTA
BERGEN TAMILSK AVIS
46
Desember
2025

தேன்தமிழிதழ்

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)



படம்: தமயந்தி

ஆசிரியம்!

வாசகர்களுக்கு வணக்கம்!

தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள டித்வா புயல் (Ditwah cyclone). இந்த பெயரை ஜேர்மன் நாடு சூட்டியுள்ளது. இது உலக வானிலை அமைப்பு மற்றும் ஐ.நா.வின் எஸ்காப் (ESCAP) வெப்பமண்டல புயல்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ளது. இலங்கையில் மேற்படி இந்த "டிட்வா" புயலாலும், அதன் விளைவால் ஏற்பட்ட கனமழையாலும், மண் சரிவுகளாலும் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்ததும், பல கோடி உடமைகள் சேதமாக்கப்பட்டதும் நாம் அறிந்தவையே. இதனால் ஏராளமான மக்கள் வீடுகளை இழந்து, கோவில்கள், மண்டபங்கள், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இப்புயல் சீற்றம் இலங்கை முழுவதையும் பாதிப்படைய செய்துள்ளது.

மக்கள் இயல்பு நிலைக்கு வருவதற்கு நீண்ட காலம் தேவைப்படலாம். இந்தியா, சீனா போன்ற பல நாடுகளும், ஏராளமான தொண்டு நிறுவனங்களும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான முதலுதவிகளை செய்து வருகின்றார்கள். அத்துடன் வெளிநாடுகளில் உள்ள தமிழர்களும் தனியாகவும் பொது அமைப்புகள் மூலமாகவும் உணவு மற்றும் உடைகள் போன்ற அவசர உதவிகளை பல்வேறு வழிகளிலும் கொடுத்து வருகின்றார்கள். அவர்களோடு சேர்ந்து எமது தேன் தமிழ் இதழும் இணைந்து கொண்டமை திருப்தி தருகிறது. ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், மண்டபங்களிலும் தங்கி வாழும் மக்களுக்கான அத்தியாவசிய உதவிகள் பல வழிகளிலும் சென்று கொண்டிருக்கிறது. அதேவேளை பல மக்கள் வீடுகளை இழந்து தமது உறவுகளுடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களும் கவனிக்கப்பட வேண்டியுள்ளனர்.

வெளிநாடுகளில் வாழும் எமது தமிழ் மக்கள் தம்மை ஒறுத்து, தம்மால் இயன்றளவு நிதியுதவிகளை தாயகம் நோக்கி அனுப்பினாலும், அவை தகுந்தமுறைகளில் பகிர்ந்தளிக்கப் படுவதில்லை என்ற கருத்து உதவிக்கரம் நீட்டும் மக்கள் மத்தியில் இருக்கிறது. புலம் பெயர் தேசங்களிலிருந்து மக்களிடம் நிதி சேர்ப்பவர்களும், தாயகத்தில் நிதிகளை பெற்று, மக்களிடம் சேர்க்கும் பொறுப்பாளர்களும் இதனைக் கருத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

2025ம் ஆண்டின் நிறைவு நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இவ்வாண்டில் உலக வாழ் மக்கள் சந்தித்த அழிவுகள், இடர்கள், சவால்கள் ஏராளம் என்று கூறலாம். இனம் மதம் மற்றும் ஆதிக்க அரசுகளுக்கு இடையிலான மோதல்களுக்கு அப்பால், இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட அழிவுகள் ஏராளம். குறிப்பாக நமது இலங்கை நாடு கார்த்திகை இறுதியில் சந்தித்த அழிவுகள் அனைத்தையும் கடந்து, மன உறுதியோடு மக்கள் அடுத்த பொழுதுக்காக நடைபோட்டு உழைத்து வருகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம், மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் தொண்டர்களுக்கும் நன்றியோடு சிரம் தாழ்த்தி நிற்கின்றோம். மேலும் இயற்கை அனர்த்தத்தாலும், யுத்த கோரத்தாலும் பாதிக்கப்பட்டு, இறந்த மக்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

2026ம் ஆண்டு உலக வாழ் மக்களுக்கு அமைதி நிறைந்த ஆண்டாக மலர வாழ்த்தி நிற்கின்றோம்.

தேன் தமிழிதழ்

Ansvarlig redaktør: **Julius Antoni**

ஆசிரியர்: **யூலியஸ் அன்ரனி**

தொலைபேசி எண்: (47) 924 63 674

Vipps 729129, eller
bank konto: 3626 31 78585

BTA
BERGEN TAMILSK AVIS

நத்தார் நற்செய்தி!

அருள்பணி றெனே பீஸ்மன் (அமதி)
பேர்கன் ஆன்மீகப் பணியகம்

'இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்' இம்மானுவேல் என்றால் 'கடவுள் நம்முடன் இருக்கிறார்' என்பது பொருள். (மத்தேயு 1:22 - 23)

"தேன் தமிழிதழ்" வாசக நேயர்களே, உங்கள் அனைவருக்கும் பிறந்திருக்கும் பாலக இயேசுவின் நல்லாசிகளை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இயேசுக்கிறிஸ்து இவ்வுலகில் மனிதனாகப் பிறந்தது மனித வரலாற்றில் ஒரு புதிய பரிணாமம். கடவுள் மனிதனை மீட்க தானே அவனாக அவதரித்த ஓர் அரிய அற்புத, மனித எண்ணத்தால், அறிவால், அனுபவத்தால், ஞானத்தால் ஊகிக்க முடியாத ஒரு புரட்சி. அந்த அற்புதமான புனிதத்தை நாம் கொண்டாடியே ஆக வேண்டும்.

மேலும், கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தோடு, நாம் எம்மை உள்ளார்ந்தரீதியில் ஆயத்தம் செய்யத் தரப்பட்ட திருவருகைக்காலத்தில் இறைமகன் இயேசுவின் இரண்டாம் வருகையை நாமும் எதிர்பார்த்து நம்பிக்கையோடு காத்திருக்கவும் அறிவுறுத்தப் படுகின்றோம்.

அன்று இறைவாக்கினர் மற்றும் வானதூதர் மொழிந்த "இம்மானுவேல்" - இறைவன் நம்மோடு இருக்கின்றார் என்ற அந்த சொல் இன்றும் எமது மனித இனத்துக்கு மிகவும் பெறுமதி வாய்ந்ததாக இருக்கின்றது. எமது அன்றாட வாழ்வினிலே நாம் நம்பிக்கை இழந்து தவிக்கின்ற பொழுது நாம் நம்பியிருந்தோர் எம்மை அந்தரிக்கவிட்டு அகலும்போது பொருளாதார கஷ்டங்கள் வாட்டும் போது எதிர்காலம் சூனியமாக தென்படும்போது, உடல் பிணிகள் எம்மை பந்தாடும் போது, நாம் நம்பிக்கையோடு தொடங்கிய கல்வி, தொழில், உறவுகள் எதிர்பார்த்த திருப்தியினை தராத போது எமது ஏக்கம் கொண்ட நெஞ்சினில் நிறைவாய் வரும் எண்ணமே இறைவன் என்னுடன் இருக்கின்றார். அந்த எல்லாம் வல்லவரைத் தாண்டி என்னை எதுவும் ஒன்றும் செய்துவிட முடியாது என்ற வலிமையைத்தருவதுதான் அந்த மந்திரச்சொல்.

இன்னுமாக, நான் எனக்கு உண்மையாக வாழ்கின்றேன். நேர்மையாளனாக எனது வாழ்வினை நடாத்திச்செல்கின்றேன். ஆனால் மனதிலே போராட்டம், அநீதிகளை, புறக்கணிப்புக்களை, பாரபட்சங்களை, ஏற்றத்தாழ்வுகளை பார்த்து பார்த்து மனம் வாடிப் போகின்றேன் எப்பொழுது விடிவு வரும், எப்பொழுது மீட்பு வரும் என்று காத்திருப்போருக்கு நம்பிக்கையை கைவிட்டுவிடாதீர்கள்.

நம்பிக்கையோடு அதே பாதையில் பயணம் செய்யுங்கள், மன விரக்தியில் வீழ்ந்துவிடாதீர்கள் இறைவன் உங்கள் உள்ளங்களிலும் எண்ணங்களிலும் ஒளி உதிக்கச்செய்வார் என்பதை உரக்கச் சொல்லும் இந்த பொன்னான காலத்தில் நாமும் எமது உள்ளத்தை மனதினை ஆராய்ந்து பார்த்து எமது எந்த விடயத்தில் இறைவன் பிறக்கப்போகின்றார் என்பதை உணர்ந்து அதற்காக எம்மையும் தயார் செய்வோம்.

நத்தார்

"நத்தார்" என்று தமிழிலும் "நத்தல" என்று சிங்களத்திலும் கிறிஸ்துமஸ் அழைக்கப்படுகிறது. இவையிரண்டும் "Natale" பிறப்பு என்ற இத்தாலிய மூலச் சொல்லிலிருந்து உருவானது. இவற்றில் நிச்சயமாக வீரமாமுனிவரின் சொல்லாட்சியின் தாக்கம் இருக்கக் கூடும்.

ரோமர் காலம் முதல் தொன்று தொட்டு நத்தார் கொண்டாட்டங்கள் இருந்தாலும் கிறிஸ்துமஸ் ஐரோப்பிய உலகில் புகழ் பெற்றது Frankish King சார்லிமேன் (Charlemagne) கி.பி 800வது ஆண்டு கிறிஸ்துமஸ் அன்று ரோமப் பேரரசராக முடிசூட்டு விழாவை நிகழ்த்திய காரணத்தினால் ஆகும்.

1647இலிருந்து 1660வரை இங்கிலாந்தில் ரோமானிய Saturnaliaவுடன் தொடர்பு படுவதை காட்டி நத்தார் கொண்டாட்டங்கள் தடை செய்யப்பட்டன. Kingdom of England மன்னர் சார்ள்ஸுக்கு எதிரான சிவில் யுத்தத்தில் ஒலிவர் குரொம்வெல் தலைமையில் வெற்றி பெற்ற பாராளுமன்றம் Church of England பதிலாக Presbyterian System உருவாக்கியது இதன் போது உருவான கலகங்களால் இங்கிலாந்து தேசமே ஆட்டம் கண்டது. Canterbury, Norwich பகுதிகள் கலகக் காரர்கள் வசமானது. பின்னர் 1660 இரண்டாம் சார்ள்ஸ் மன்னர் வருகையில் restoration நடைமுறை மூலமாக கிறிஸ்துமஸ் கொண்டாட்டங் களுக்கான தடை நீக்கப்பட்டது.

இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட புராதன கிறிஸ்தவ அடையாளங்களில் முக்கியமானது 1903ஆம் ஆண்டு அநுராதபுர அகழ்வாராய்ச்சியில் நெஸ்டோரியன் இரட்டைச்சிலுவைகள் மற்றும் வவுனியா திருமுழுக்கு தொட்டியுமாகும் (Baptism Font).
இலங்கையில் முதலாவது கிறிஸ்துமஸ் கொழும்பு துறைமுகத்தில் 1505 லொரன்ஸோ டி அல்மேதா தலைமையில் கொண்டாடப்பட்டது.

கிறிஸ்துமஸ் மரம் 17ஆம் நூற்றாண்டில் முதன் முதலில் ஜேர்மன்-அவுஸ்திரியா பகுதிகளில் காட்சிப் படுத்தப் பட்டு பின்னர் அங்கிருந்து ஏனைய பகுதிகளுக்கு பரவியது. கிறிஸ்துமஸ் மரத்தில் நான்கு பிரதான வண்ணங்கலான, பச்சை- இயேசுவின் நீடித்த ஜீவிதம், நீலம்- பரிசுத்த மேரியையும், சிவப்பு- இயேசுவின் தியாகத்தையும், தங்கநிறம்- மூன்று ஞானவான்களின் பரிசையும் பிரதிநித்துவம் செய்கின்றன.

உலகம் முழுவதும் கிரெகேரியன் கலண்டர் அடிப்படையில் டிசம்பர் 25ஆம் திகதியும் ஜூலியன் கலண்டர் அடிப்படையில் ஜனவரி 7ஆம் திகதியும் கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுகிறது.

Merry Christmas to you all.

-Mohamed Ali Yaseer Arafath-

2026ஆம் ஆண்டில் நோர்வே அரசின் புதிய சட்டங்கள்

-அன்ரனி யூலியஸ்-

2026ம் ஆண்டு புதிய சட்டங்கள், புதிய விதிமுறைகளை நோர்வே அரசு வழங்குகிறது. ஜனவரி 1, 2026 முதல், புதிய சட்டங்கள் செயல்படுத்தப்படும், மேலும் பழைய சட்டங்கள் புதுப்பிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

மதுபானங்கள், போதை வஸ்துக்கள், புகைத்தல் போன்றவற்றுக்கு இன்றைய இளையசமூகம் அடிமைகளாகி வருகின்றனர். இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசு பல வழிகளிலும் சிந்தித்து இன்று சில முடிவுகளை அறிவித்து உள்ளது.

நீங்கள் எவ்விடங்களில் எல்லாம் மதுபானம், புகைத்தல் ஆகியவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்பது தொடர்பாகவும் செய்திகள் தரப்படுகிறது.

16 வயதுக்கு மேற்பட்டோர் மட்டுமே ஆற்றல் பானங்களை (Energidrikk) அருந்தலாம். மேலும் கடைகளில் ஆற்றல் பானங்களை வாங்க விரும்பினால் உங்கள் அடையாள அட்டையினை உறுதிப்படுத்தியே அதனை வாங்கலாம். 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு எனர்ஜி பானங்களை (Energidrikk) விற்பனை செய்வது தடைசெய்யப்படுகின்றது.

எனவே, கடைகளுக்குச் செல்லும்போது உங்களோடு செல்லுபடியாகும் அடையாள அட்டையை எடுத்துச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது நல்லது.

புகை பிடித்தல் பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால், விதிமுறைகளை கடுமையாக்குவது குறித்து அரசாங்கம் நீண்ட காலமாக எச்சரித்து வருகிறது.

புகைபிடிக்கும் சட்டத்தில் மாற்றங்கள்

18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் உங்களுடன் இருந்தால் காரில் புகைபிடிப்பது இப்போது சட்டவிரோதமாகும். விளையாட்டு மைதானங்களிலும் வெளிப்புற விளையாட்டுப் பகுதிகளிலும் புகைபிடிப்பது சட்ட விரோதமாகும்.

மேற்படி பழக்கங்களில் இருந்து இளைய சமூகத்தினரைப் பாதுகாக்கவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது, மேலும் மின்சிகரெட்டுகளுக்கும் இந்த சட்டம் பொருந்தும் என அறிவிக்கப்படுகிறது. இணைய வலைத்தளங்கள் ஊடாக வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்படும் Snus போன்றவற்றுக்கும் தடை விதிக்கப்படுகிறது.

சிறார்களுக்கு புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வதைத் தடுக்கவும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது கூடுதல் கட்டுப்பாட்டைப் பெறவும், புகையிலைப் பொருட்கள் மற்றும், மின்சிகரெட்டுகளின் இணைய விற்பனையைத் தடை செய்யவும் அரசாங்கம் முன்மொழிகிறது.
இதன் பொருள், தனிநபர்கள் இனி வெளிநாடுகளில் இருந்து சிகரெட், snus, மின்- சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைப் பொருட்களை வாங்க முடியாது.

Foto: Jacinthan

பேர்கன் தமிழ் சங்கம் வருடாவருடம் நடாத்தும் ஒளிவிழா கடந்த 13.12.2025 அன்று Ytrebygda கலா-சார மண்டபத்தில் மண்டபம் நிறைந்த மக்களோடு வெகு சிறப்பாக நடைபெற்றது.

அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

எமது தாய் மண்ணில் போரிலே உயிர் ஈய்ந்த வீரர்கள், மக்கள், மற்றும் இயற்கை அனர்த்தத்தில் மரித்த மக்கள், இன்னும் பேர்கன்நகரில் வாழ்ந்து இறந்த சகோதரர்களுக்காகவும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அருட்பணி Cruf அவர்கள் இயேசு பிறப்பு, அதன் வழி எம் மனங்களுள் ஒளி பிரகாசிக்கப் படவேண்டுமென சிறப்பான சிற்றுரையினை வழங்கினார்.

கலை நிகழ்வின் ஆரம்பமாக பரதாலயா கலைக்கூட மாணவர்கள் இறைபுகழ் கீதமொன்றுக்கு பரத நாட்டியமாடி மக்கள் மனங்களை அரங்கினுள் ஒன்றிணைத்தனர்.

நோர்வே திருமறைக்கலா மன்றத்தின் தயாரிப்பில் “நோவா” தாத்தாவின் விவிலிய வரலாற்றுக்கதைதனை சிறந்த இசையுடன் ஆற்றுகைப் படுத்தினர்.

மூன்று வயது சிறார்களிலிருந்து 15 வயது இளையோர் வரையிலானோர் இந்நிகழ்வில் பங்கேற்றினர். நோர்வே திருமறைக்கலா மன்றத்தினர் பாலன் பிறப்பு காட்சியினையும் தமது தயாரிப்பிலான தாலாட்டு பாடலுக்கு சிறப்புற காட்சிப்படுத்தினர்.

தொடர்ந்து அன்றைய தினம் (13.12.2025) St.Lucia தினமாகையால் மன்றத்தின் மழலைகள் அனைவரும் வெள்ளை நிற ஆடையணிந்து அணிவகுத்து அரங்கை நிறைத்து “Santha Lucia” பாடலை பாடி மகிழ்வித்தனர்.

தொடர்ந்து ஏழாலை சிவ சக்திதரன் (கணணிப் பொறியியலாளர், மிருதங்க வித்தக்கர், கலை நகரி) தாள ஜதிகளுக்குக்கு இசைக் கருவிகளை மீட்டி மக்களை மகிழ்வித்தார். அதிலே morsing எனும் இசைக் கருவியின் இனிமை சிறப்பென்றே கூறலாம்.



புனித பவுல் ஆலய தமிழ் ஆன்மிகப் பணியக்கத்தின் புனித சிசிலியா பாடகர் குழாமினர் கரோல் பாடல்கள் இரண்டினை சிறப்பாகப் பாடினார்கள். இவர்கள் 1987ம் ஆண்டிலிருந்து பேர்கன் நகரில் ஆன்மிக பாடகர் குழுவாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. தொடர்ந்து பேர்கனில் வாழும் சிறந்த பாடகர்கள் சிலர் அழகான பாடல்களை பாடி மக்களை இசை வெள்ளத்தில் ஆழ்த்தினர்.

நிகழ்வுகளை திருவாளர் மதன்பாபு அவர்கள் சிறப்பாக தொகுத்து வழங்கினார். தமிழ் சங்கம் பேர்கன் நகரில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஒளி விழா நிகழ்வினை நடாத்தி வருகின்றனர். அதன் வழியாக பெறப்படும் பணம் தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு அனுப்பி உதவி புரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது

நினைவுகளை சுமக்கிறவன்

ஆழிப்பேரலை
21 ஆண்டுகள்
நினைவுகள்....

ஜவஹர்.G (Allround photographer)

தினம் தினம் யுத்தத்தால் காவு கொள்ளப் பட்டுக் கொண்டிருந்த எமது மக்களை இயற்கையும் தனது பங்கிற்கு வஞ்சித்தது. யுத்தக் கெடுபிடிகளுக்கும் மத்தியில் மக்கள் தமது கையில் அகப்படும் அமைதியான கணங்களில் பெருநாட்களை கொண்டாடவும் தவறவில்லை. அப்படித்தான் அன்றும் அந்தக் கொடிய நாள்...
2004ம் ஆண்டு மார்கழி 26 அன்று நத்தார் கொண்டாட்டங்களை முடித்துக்கொண்டு உறங்கிக் கிடந்த மக்களை வாரிச் சுருட்டிக்கொண்டு தனக்குள் எடுத்துக் கொண்டது. தனது மடியில் பசியாறி, தனது கரைகளில் உறங்கிக்கிடந்த தனது மக்களையே தனக்குள் ஆட்கொண்டாள் கடலம்மா.

தேன் தமிழிதழின் முதலாவது வெளியீட்டில் (மாசி-2021) “படங்களோடு பேசுதல்” என்ற புகைப்படக் கலைஞர்கள் தொடர்பான எனது பதிவில் தமிழகத்தைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் ஜவகர்.G அவர்களைப் பற்றி எழுதியிருந்தேன். நாகர்கோவில் கடியபட்டினம் கரையோரக் கிராமத்தை ஆழிப்பேரலை ஆக்கிரமித்தபோது நேரடியாக நின்று புகைப்படங்களாகப் பதிவு செய்த கலைஞர். இன்று 21வருடங்களின் பின்னும் அந்த நெஞ்சைப் பதறடிக்கும் நினைவுகளிலிருந்து மீளமுடியாமல் தவித்திருக்கும் கலைஞன். அவரது இந்த ஆண்டின் நினைவுகளைத் தேன் தமிழிதழ் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

-தமயந்தி-

நினைவுகளை சுமக்கிறவன்

-ஜவகர்.G-

ஜவஹர்.G (Allround photographer)
நாகர்கோவில்-தமிழ்நாடு
குறும்பட நடிகர், வானொலி நாடகக் கலைஞர், மலையாளத் திரைப்பட பின்னணிக்குரல் கலைஞர்.

அதிகாலையில் கருக்கலில் கிளம்பியிருந்தேன். நிலவு இன்னும் மறையாமலிருந்தது. என்கூடவே பயணத்தில் தலைக்குமேலாக ஓடி வந்து கொண்டே இருந்தது. ராஜாக்கமங்கலம் பிள்ளையார் கோவில் டீக்கடையில் ஒரு டீ சொல்லிவிட்டு காத்திருந்தேன். அடுப்பை அப்போதுதான் பற்ற வைத்திருந்தார். பால்நிலவு விரிந்து கிடந்த ஆலமரத்தின் ஊடாக மார்கழிப் பனியோடு பிணைந்தபடி புகைபோல விழுந்தது. சற்று நேரத்தில் சூடாக டீ கிடைத்தது. குளிருக்கு இதமானதாக இருந்தது அந்தச் சூடு. முதல் மிடறு உதட்டினை சுட்டுவிடாமல் ஊதியபடி சுவைத்தேன். சர்க்கரை போடுவதற்கு மறந்துவிட்டார் போலும். டீக்கடைக்காரர் என்னையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

“சார் டீயில் சர்க்கரை போட மறந்துவிட்டேன்” என்றார்.
“பரவாயில்லை இன்றைக்கு சர்க்கரை இல்லாத டீயினை குடித்துக் கொள்கிறேன்”
நான் அவரை பார்த்து மெல்லிய புன்னகையினை பூத்தேன். வெளிச்சம் வராத அதிகாலையில் ஒருவருக்கொருவர் சமரசம் செய்து கொண்டோம். இன்று சர்க்கரை போடாத டீ குடித்தால் ஒன்றும் குறைந்து போகப் போவதில்லை என்றது மனம். டீ மனுமனுவென்று என்னவோ போல இருந்தது. இன்று இந்த டீயை சுவைத்து ரசிப்போம் உள்ளுக்குள் சொல்லி கொண்டேன்.

அன்றைய நாள் முழுவதும் இந்த சுவையற்ற ஒற்றை டீ மட்டுமே எனக்கானது என்று எனக்குத் தெரியாது. நான் கடியப்பட்டிணம் கடற்கரை கிராமத்தில் இருந்தேன். வெறும் ஐந்தே நிமிடங்களில் ஆழிப்பேரலை அத்தனையும் அழித்துப் போட்டிருந்தது.

நாள் முழுக்க நாவு வறண்டு பிராந்தனைப்போல சுற்றுகிறேன். மனம் கனத்து கிடந்தது. கண்களில் நீர் கோர்த்தது. இதயம் வழக்கத்துக்கு மாறாக விம்மி பதைபதைக்கிறது.கைகள் கேமிராவினை இறுகப் பற்றியிருந்தது. போரழிவுகளும்

மரணங்களையும் பதிவு செய்கிறேன். அழகியலாக ஒரு காட்சிக்கூட என்னால் காண முடியவில்லை. துயரங்களையே காட்சிகளாக பதிந்துகொள்கிறேன். அதனால் தான் இவன் கல் நெச்சுக்காரன், இவன் கேமிராவை இனி எடுக்கவே கூடாதென்றனர்.

கடல் கொந்தளிப்பில் உயிர்பிழைத்த புகைப்பட கலைஞரின் பேட்டி என்கிற பெட்டி செய்தி பத்திரிக்கையில் வெளிவந்திருந்தது.

நினைவுகளைச் சுமக்கிறேன். சுனாமிக்கு சாட்சியாய் போனதால் மனம் அவதிப்படுகிறது. இன்றும் துயர் காட்சிகள் துரத்துகின்றன. கனவில் கடலில் தத்தளிக்கிறேன். வாழ்க்கையிலும் பற்றிப்பிடித்து மிதக்க, பிழைக்க ஏதேதோ கிடைக்கிறது.
இந்த வாழ்நாள் முழுக்க இந்த துயரை சுமந்து கொண்டே கடந்தாக வேண்டும். அந்தநாள் இன்றைய நாள் டிசம்பர்-26

கடல் அழகானது.
வாழ்க்கை !

தேன் தமிழிதழ் 1வது பிரதியில் பிரசுரமானது.

கலைஞன் தனது படைப்பின் மூலம் அத்தனையும் கலைத்து போடுகிறான் எனவே அவன் கலைஞன் எனப்படுகிறான். நான் காலமும் இயற்கையும் கலைத்துப் போட்ட பேரழிவினைப் பதிவிட்டேன்.

இது சுனாமி அடிக்கிற போது லைவ்வாக எடுத்தபடம். அந்த வேளையில் எல்லோரும் கடலை விட்டுக் கரை நோக்கி உயிரை பிடித்துக்கொண்டு ஓடினார்கள். நான் இந்த காட்சியினை பதிவு செய்வதற்காக கடலை நோக்கி ஓடினேன்.

தண்ணீரில் தத்தளித்த இந்த பெரியம்மாவை தூக்கி வந்தனர். ஈரம் சொட்ட சொட்ட வழிகிற நீரிலிருந்து காப்பாற்றி வந்தனர். எனக்கும் இந்த தைரியம் எங்கிருந்து வந்ததென்பது தெரியாது. கடலும் அலையும், ஆழியும், அதன் ஓங்காரமும், உப்புக் காற்றும், கடல் என்கிற பெரும் வெள்ளக்காடும் எனது மூதாதையர்கள் வழிவழி வந்த டி. என். ஏ. க்ளின் மூலம் உள்ளுறைந்தவை. அதுவே என்னை இயக்கியது.

லைவ்வாக சுனாமி நேரத்தில் எடுத்த இந்த படம் சரியான இடத்தில் காட்சிப் படுத்தப் பட்டிருந்தால், அதற்கான உரிய இடத்தை அடைந்திருக்கும். அடையாளமும் பெற்றிருக்கும் என்கிற குறை எனக்கு எப்போதும் உண்டு. ஆனாலும் எதையும் எதிர்பார்த்து கலைஞன் தன்னை சுற்றிய விடயங்களை அவன் பதிவு செய்வதில்லை என்பதோடு ஆசுவாசம் அடைகிறான்.

காலம் கலைத்து போட்டதை அவன் உறையவைத்து பதிவாக உங்களுக்கு படைக்கிறான்.
எனவே அவன் படைப்பாளியாகிறான்.

(படத்தை நன்றாக பாருங்கள் என் இதயத்தின் படபடப்பு, என் கைகளின் நடுக்கம் அதில் தெரியும்)

ஒரு நொடியில் இதழோரம் பூக்கிற சிரிப்பினையும், துயரத்தால் கண்களில் கசிகிற கண்ணீரையும் பதிந்திடமுடியும் என்கிற புகைப்பட கலைஞன் ஜவஹர்.G.

பழைய சித்தாந்தங்களைக் கட்டிச் சுமப்போர்...

-சிவா மாலதி-

நண்பர் ஒருவருடன் ஒரு குறிப்பிட்ட காலமாக சில உரையாடல்கள் மீண்டும் மீண்டும் எழுந்த வண்ணம் இருந்தன. அந்த உரையாடலின் சாரத்தை நண்பர்களின் கருத்துக்களுக்காக இங்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

1.

ஆண்கள் பெண்களைவிட வலிமையானவர்கள் ஆனால் அந்த வலிமையை ஒடுக்குமுறைக்கு பயன்படுத்தக் கூடாது என்பது நண்பரின் வாதம்.

வலிமை என்றால் உடல் வலிமையைக் குறிப்பிடுவதாக அவர் தெளிவுபடுத்தினார். Muscle mass, bone mass அடிப்படையில் ஆண்கள் ஒப்பீட்டளவில் பலம் கூடியவர்கள் என்றார்.

ஆண்கள் அனைவரும் வலிமையானவர்களும் இல்லை பெண்கள் அனைவரும் வலிமையற்றவர்களும் இல்லை என்றேன்.

மென்மையான ஆண்களையும், வீரமான பெண்களையும் தினமும் பார்த்துக் கொண்டுதானே வாழ்கிறோம். தாய்வழி சமூகங்கள், வேட்டைச் சமூகங்களில் ஆணும் பெண்ணும் வேட்டையாடி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டினேன்.

பெண்களை ஆண்கள் பலத்தினால் அடிமைப் படுத்தியது தான் பெண்ணொடுக்குமுறையின் ஆரம்பம் என்றார் நண்பர்.

2.

பிள்ளைப் பேற்றுக்குப்பின் தந்தையைவிடவும் தாயுடனான பிள்ளைகளின் பிணைப்பு உயிரியல் அடிப்படையைக் கொண்டது, அதனால் அதுவே இயற்கை, தாயின் அன்பு தந்தையின் பிணைப்பைவிட பன்மடங்கு ஆழமானது என்றார் நண்பர். தாய்மை உயிரியல் அடிப்படையில் தந்தைமையை விட அதிகம் ஆனாலும் அதை சாதகமாக பயன்படுத்தி ஒடுக்குமுறைகளை செய்யக்கூடாது என்பதே அவரின் வாதம்.

தாய்மை என்பது சமூகத்தால் கட்டமைக்கப்பட்டது இல்லை. அந்த இயல்பை சமூகம் தனக்காக பயன்படுத்திக் கொண்டது என்றார். அதற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை என்றேன், தாய்மை ஒரு சமூக எதிர்பார்ப்பு என்றேன். இல்லையென்கிறார்.

ஆண்களுக்குள்ளும் தாய்மை உணர்வு இருக்கிறது என்றேன்.

ஆனாலும் பெண்களுக்கே அது அதிகமென்று வாதிட்டார். அன்றாடம் காணும் பல உதாரணங்கள் இருப்பினும், "Mother Mary comes to me, அம்மா ஒரு கொலை செய்தாள்" போன்ற சில புத்தகங்களை எடுத்துக்கூறி, யதார்த்தத்திலிருந்தும் உதாரணங்களை எடுத்துச்சொன்னால் அவை விதிவிலக்குகள் என்கிறார்.



ஆதாரங்களை காட்டச் சொன்னால் விலங்குகளை உதாரணங்களாகக் காட்டுகிறார்.

உண்மையில் பெண்கள் தொடர்பான சில விடயங்களில் சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் தோழர் சில அடிப்படையான விடயங்களில் மிக மிகப் பழைய சித்தாந்தங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்.

நாகராசா மாமாவின் கூப்பன் கடையும், ஸ்ரீமாவோ காலத்து பாண் கியூவும்

வரலாற்றின் எல்லைக் கற்களான மானுடர் காலங்களை மீட்டும் ஒரு அஞ்சலிக் குறிப்பு.

ப.விஜயரட்னம் ஸ்ரீரங்கன் - German

எங்களின் பாரி: பெருமகனார் நாகராசா மாமா, கேட்போருக்கு இல்லை எனாது அளிப்பவர்.

சரவணை மேற்கு எனது ஊர், உலர்ந்த வெப்ப மண்டலமாகக் காட்சிதரும் இந்த ஊரில் பசுமையான காலத்தைத் தை மாதமே அழைத்து வரும். அப்படியான காலத்தில் 1974ஆம் /1975ஆம் ஆண்டுகள் பாணுக்குக் கியூ வரிசையில் நின்ற காலத்தைக் கட்டாயமாகக் கொணர்ந்தார் அமையார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க.

இந்தச் சூழலில் கூப்பன் கடைகளைத் தவிர வேறெந்த ஆதாரசக்தியும் இல்லாத நமது ஊரில், பணப்பயிர்கள் நாட்டப்படுவதிலிருந்து, மரவள்ளியை நட்டுப் பயிராக்குவதில் நாம் முயன்றாலும் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடிய போது நாம் அதிகநாட்கள் நாகராசா மாமாவின் கடைக்கு உணவுப் பொருட்களுக்காகச் சென்றுள்ளோம்.

அந்தக் காலத்தின் ஏதோவொரு பசுமையான பண்பு அவரிடம் இருந்ததைக் கண்டவன் நான். அதுதான், முடிந்தவரை கேட்போருக்கு இல்லை எனாது அளிப்பவர் எனும் மானுட நிலை.

நாகராசா மாமா குடும்பம், எங்கள் குடும்பத்து உரித்துடைய உறவுகள். என் பால்ய காலத்து வாழ்நாட்களில் நெருங்கிய உறவாடலும், நல்லது கெட்டதெல்லாம் இணைந்து உறவாடிய மிக நெருங்கிய இந்தச் சொந்தங்கள் எல்லாம் காலக் கொடுமையால் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சோழகக் காற்றினுட் பிய்த்தெறியப்பட்ட பஞ்சணைப் பஞ்சாகப் பறந்து, ஒவ்வொரு திக்கில் வாழ்கிறோம்.

இன்றும், ஸ்ரீமாவோ காலத்துப் பஞ்சத்தை ஞாபகம் கொள்ளும்போதும் நாகாரசா மாவின் கூப்பன் கடையும், சூட்டி மச்சானும், நாகராசா மாமாவுமே அதிகம் ஞாபகம். அன்று, நாகராசா மாமா கடனுக்கு உணவுப்பொருட்கள் தராமல் இருந்திருந்தால் எங்கள் வீட்டுப் பட்டினிப்பானை அடுப்பில் ஏறி இருக்காது.

நாகராசா மாமாவின் துணைவியார் என் தாயாரின் சொந்த மச்சாள், அம்மாவின் தாய்மாமன் மகள் லோகேஸ் மாமி. நாங்கள், நாகராசா மாமி என்போம். அவர், எங்கள் தோட்டத்துக்கு எரு (பசளை)லொறிக் கணக்காய்ப் பறிக்க தன் காதில், கழுத்தில் கிடந்த தங்கத்தைக் கழற்றித் தந்த அந்த நாளில் எனக்கு வயது 11.

1973ஆம் ஆண்டுகளில், பஞ்சம் தலைவிரிக்க ஆரம்பித்தது. இலங்கையில் பொல்லாத காலத்தைச் ஸ்ரீமா அம்மையார் கொணர்ந்தபோது நாங்கள் நாகராசா மாமா வீட்டுக்கு அடிக்கடி சென்று நாகராசா மாமியிடம் உதவிபெற்ற காலத்தை, நாகராசா மாமாவின் இழப்பு மீளக் கண்ணெதிரே கொணர்ந்து, காட்சிப்படுத்துகிறது.

இன்று, பெரியராசன், கலா, சூட்டி, கண்ணன் எல்லோரும் ஒவ்வொரு மூலையில். நமது குடும்ப வேர்களையே நம் அடுத்த தலைமுறை அறியாதுபோன இன்றைய நிலையில் நீடித்த பாலமாக நாகராசா மாமா இருந்தார். அவர், எங்களூரில் எல்லாம் பஞ்சங்களையும் போக்கத் தன்னாலான உதவிகளை வழங்கிய பெருமகனார்.

காலம், எப்படியெல்லாம் நம்மைக் கடந்து பயணிக்கிறது. நாம், இழந்தது உறவுகளை மட்டுமல்ல பிறந்த மண்ணையும், உறவுகளையும் இழந்தது கொடுமை. சுற்றமில்லை, சூழல் இல்லை சொந்தம், பந்தம் எதுவுமே புரியாது போன இந்தச் சூழலுள் நாகராசா மாமாவின் இழப்பும் காலத்தில் எப்படியோ நந்தாவால் அறியக் கிடைத்தது. அவர் நித்தியமான இயற்கையின் விதியோடு கலந்து இயங்கட்டும் .

ப.விஜயரட்னம் ஸ்ரீரங்கன்

மதுரன் கவிதைகள் இரண்டு

I

உன்னை சுற்றிலும் எப்போதாவது பறந்து திரியும்
வண்ணத்துப்பூச்சிகளை கவனித்திருக்கிறாயா?

காற்றில் அலைந்து பறந்து
உன் தோள்களில் இறங்கிக்கொள்ளும் அந்த
மென்மையான உயிர்தான் எனது பிரியம் நித்யா!

எத்தனை தரம் விலகிப்பறந்தாலும்,
உன் வாசனைக்கு பழக்கப்பட்ட அதன்
சிறு இறக்கைகள் மீண்டும் மீண்டும்
உன்னிடம்தான் தேடிவருகின்றன.

அதை
பிடிக்கவோ சொந்தமாக்கவோ
உன்னால் முடியாது. ஆனாலும்
உன்னருகில் இருக்கும்போதுதான்
அதன் நிறங்களும், அதன் அமைதியும் பூரணமாகிறது.

விலகிச்செல்வது சுதந்திரம்
மீண்டும் வருவது அன்பு!

பக்கம்

2

நினைவுகளை உறைய வைத்து ஒரு துர் கனவைப்போல
கூடவே அலைந்து திரிகிறது காலம் !
சாத்தப்பட்டிருக்கும் கதவிடுக்குகளின் வழி,
திறாங்கு பூட்டப்படாத ஜன்னலின் வழி,
ஓரமாக சரிந்துள்ள கூரையின் வழியே எல்லாம்
ஒரு பிசாசைப் போல
என்னை வெறித்துப்பார்த்துக்கொண்டிருக்கிறது.

அது சுமந்துவந்திருக்கும் நினைவுகள்தான் அச்சுறுத்துகிறது.

இரு...என் அறை முழுவதும் எதை பறக்கவிடுகிறாய்.
வண்ணாத்துப்பூச்சிகளையா..?

இல்லை இல்லை. அவையெல்லாம் சின்னஞ்சிறு நினைவுகள்.
அத்தனை நினைவுகளின் மீதும் இருள் படர்ந்து வெறுமையாய் கிடக்கிறது.
யாருடைய வெம்மையில் இந்த நினைவுகள் எரிந்தன?
கவனி, வெறுமையின் வாடை பட்டு என் உடல் நடுங்குவதை கவனி...!
நடுக்கத்தின் நிழல்கள் அறையின் சுவரெங்கும் படர்ந்து அலைக்கழிவதையும் கவனி...!

ஓ காலமே....
உன் முதுகிலிருக்கும் சாக்குப்பைகளில் எதைத்தான் சுமந்து வந்திருக்கிறாய்...?
காதலை...? வெறுமையை?? அல்லது துடிக்க துடிக்க
நான் அறுத்துப்போட்ட பிஞ்சு மனங்களின் ஓலத்தையா?

முடியாது.. நான் கதவுகளை திறக்கப்போவதில்லை.
தட்டியும், உறுக்கியும், மன்றாடியும் திறந்த கதவுகளையெல்லாம்
நானாகவே சாத்தியிருக்கிறேன்.... அப்படியே உன்னையும் சற்றாவது நிறுத்துகிறேன்.

காலப்பெருந்துயர்...

இரவு முடிய நான் தூங்கவேண்டும்.
அதுவரைக்குமாவது.. நீ வாசல்களிலேயே தாமதி.. ஆனால்
அப்படி வெறித்துமட்டும் பார்க்கதே..
அந்த பார்வையில்தான் நினைவுகள் தகிக்கிறது...
தூக்கம் என்னிலிருந்து தனித்தெழுந்து அறைமுழுதும் அலைக்கழிகிறது.
பின், பிடியற்ற கதவுகளிற்கு பின்னால் உடைந்து கிடக்கிறது என் இரவுகள்!

Note :
இது Prose Poetry முறையில் முயற்சித்து பார்க்கப்பட்ட ஒன்று என்றும் சொல்லலாம்.
அல்லது சும்மா தோன்றியதை எழுதிவிட்டு பார்த்தால் Prose poetryக்குள்
கஷ்டப்பட்டாவது அடக்கிவிடலாம் என்று தோன்றியதாலும் சொல்லலாம்.

அண்மையில் ஒரு ரயில் பயணத்தில் அந்தப் பெண்ணைச் சந்தித்தேன். சந்தித்தேன் என்பதை விடக் கண்டேன் என்பது தான் சரியாக இருக்கும்.

புறப்பட நேரமிருந்த ரயிலில், அதைத் துரத்திப் பிடிப்பது போன்ற அவசரத்தோடும் வேகத்தோடும் ஓடி வந்து ஏறிக்கொண்டார். அவரது வயது 40இலிருந்து 50இற்குள் இருக்கலாம். நேர் வகிடெடுத்த ஒற்றைப் பின்னல் முடியுமிடத்தில் ரப்பர் பாண்ட் கீழே சூம்பிச் சுருண்ட இரண்டங்குல முடி. தற்போதய எந்த trend இற்கும் பொருந்தாத, குளிரும் தாங்காத, அதிகம் பாவனையிலில்லாத நிறத்தில் அதி நீளமாக காலடியில் சுருங்கிக் கிடக்கும் நீளக் காற்சட்டை, அப்படியேயான தகமைகளைக் கொண்ட ஜக்கேற், சப்பாத்து. ஆண்கள் அணியும் ஷால். அதைக் கழுத்தில் சுருக்குப் போடும் பாவனையில் சுற்றி இறுக்கியிருந்தார்.

சுப்பர் மார்க்கெட்டில் கிடைக்கும் 50cent bag முழுவதும் அடைந்த பொருட்களுடன் வந்தமர்ந்தவர் சூழ்நிலை பற்றி அவதானிக்கவேயில்லை. அல்லது அவரது வாழ்நிலை சூழ்நிலைகளை அவதானிக்கும் நிலையில் இல்லை என நினைக்கிறேன். கை பேசியை உயிர்ப்பித்து அந்த முழு ரயிற்பெட்டியில் உள்ளவர்களுக்கும் கேட்கும் தொனியிற் பேசத் தொடங்கினார்.

அதன் சாரம்.....
அவர் மூன்று தமிழ் வீடுகளில் வேலை செய்கிறார். மூன்றும் வேறு வேறு இடங்களிலிருக்கின்றன. அந்தத் தூரங்களை நீண்ட தூரம் நடந்து ரயிலேறிக் கடக்கிறார். ஒன்று தங்கை வீடு, இன்னொன்று தம்பி வீடு. மற்றொன்று யாரோ தெரிந்தவர் வீடு.

அவரது உரையாடல் இப்படியிருந்தது...
“காலமை வெள்ளன நான் வெளிக்கிட்டு ரெயிலைப் பிடிச்சுக்கொண்டு வந்திறங்கும் போய்த்தான் நித்திரையால எழுப்ப வேணும். பிறகு வீடு வாசல் கூட்டி, பாத்திரபண்டம் மினுக்கி, இடையில மற்ற வீட்டில ஓடிப்போய் வீடு வாசல் கூட்டி பாத்திர பண்டம் மினுக்கி அவே தாற பத்து ரூவாய வாங்கிக்கொண்டு இஞ்ச திரும்ப ஓடி வந்து இவளுக்குச் சமைச்சு, புருசன் வந்து அவே சாப்பிட்ட பிறகு சாப்பிடுவம் எண்டு சாப்பாட்டைப் போட்டால் இப்பிடிக் கோப்பை நிறையப் போட்டுச் சாப்பிட்டாலே அக்கா எண்டுறாள். நான் பெத்த புள்ளை அவளுக்கும் புள்ளதான. தாங்கள் பதமா அவிச்சு விழுங்கிறதில ஒரு பாசல் என்ர புள்ளைக்குக் கட்டித்தரக் கூடாதோ. கண்ணீர்ச்சோறு தின்னுறனக்கா.

அங்க தம்பி வீட்ட போனா தம்பிட மனிசி இடியப்பம் கூடப் புழிய மாட்டா. அவேட வீடு வாசல் கூட்டிக் கழுவி, இரவைக்கும் அடுத்தநாள் மத்தியானத்துக்கும் சமைச்சுப் போட்டுக் குளிக்கப் போனா தம்பீட மனிசி சொல்லுறா நான் குளிக்கிறதால தங்களுக்குத் தண்ணி வில் (bill) கூட வருகுதாம். பள்ளிக்கூட லீவில நானும் பெடியனும் அவே-யோட தங்கின ஒரு மாதத்துக்கு 200 ரூவா (200 Euro) கூட வந்ததாம். எங்களையும் அவேக்கு வந்தது போல தூக்கிக் காவுற புருசன் கிடைச்சால் இப்பிடியா அலையப்போறம். எந்தநேரமும் குடிச்சுப்போட்டு வீட்டுக்க கிடக்கிற சனியனால தான நான் இப்பிடி நாய் படாப்பாடு படுறன். கண்டறியாத வெளிநாடு. இதுக்கு ஊரில இருந்து கூலிக்காறனைக் கட்டியிருந்தால் மரியாதையா ஒரு வாய் சோறு திண்டிருப்பன்.

அக்கா போனில சாச் (charge)கொஞ்சந்தான் கிடந்தது முடியுது. தங்கட வீட்ட சாச் போடக் கரண்ட் காசு கூட வருகுதாமெண்டு ரெண்டு பேரும் மூஞ்சிய நீட்டுதுகள்.

தம்பி ஒரு சொல்லு எனக்காகவெண்டு கதைக்க மாட்டான். காணுமக்கா நான் எல்லாத்தையும் விட்டுட்டு வெளியால வந்திட்டன். எங்கையாவது சாச் போட்டப் பிறகு நான் எடுக்கிறன். இல்லாட்டி செத்துப்போறன்"

எதிர்முனையைப் பேச இடங்கொடாது அலைபேசியை அணைத்து விட்டார். எதிர் முனையிலிருந்தவர் என நினைக்கிறேன் பலமுறை அலைபேசி ஒலித்த போதும் அணைத்து வைத்து, ஒலி வெளிவர உடைந்து அழுதவர் ஒரு தரிப்பிடத்தில் இறங்கிப் போனார்.
இப்படி.... இவர் ஒருவரல்ல. இவரொரு உதாரணம்.

இது போல பல்வேறு சிறுசிறு மாற்றங்களுடனான பிரச்சனைகளுடன் சிரமப்படும் பலருக்கும் தெரியாமலிருப்பது தாம் குடியேறியிருக்கும் நாட்டின் மொழியறிவு, அதன் மூலம் தாம் அறிந்து கொள்ளக் கூடிய அந்நாட்டின் சட்டங்கள் தமக்கான உரிமைகள் போன்ற பல விடயங்கள்.

சிந்தித்துப்பார்த்தோமானால், மேற்கல்விக்காகவோ, வேலை சம்பந்தமாகவோ புலம் பெயர்ந்தவர்கள் தவிர்த்து, ஏனைய பெண்கள் பெரும்பான்மையாக திருமணத்தை அடிப்படையாகக் கொண்டு புலம்பெயர்ந்தவர்கள்.
பொதுவாக இப்படியான பெண்களே பெரும்பாலும் இந்த அவலத்துக்கு ஆளாகின்றார்கள்.

வந்த புதிதில் நாட்டைப் புரிவது, மொழியறிவது போன்ற அவசிய ஆர்வங்களை விட புதிய பந்தம் அவர்கள் மனதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.
பின் அடுத்தடுத்துக் குழந்தைகள் என ஆகும் போது அவர்களது முழு நேரமும் வீட்டுக்குள்ளேயே முடக்கப் படுகிறது. தென்னிந்தியத் தொலைக்காட்சிகளும், ரிக்ரொக் கசமுசாக்களும் இவர்கள் கூடும் வட்டத்தின் அறிவு வளர்க்கும் முக்கிய பேசுபொருளாவதுடன் காலம் கடக்கிறது. கட்டியவன் காட்டியது தான் பாதை. அவன் பேசுவதே வேதம் என்பதை வீட்டுக்குள்ளிருந்து பெருமையாகச் சொல்லும் பெண்களுமுண்டு.

இன்னும் ஒரு பகுதிப் பெண்களுக்கு இந்த நாடுகளில் கல்வி கற்கவோ, நாட்டை அதன் போக்கைப் புரிந்து கொள்ளவோ விருப்பிருந்தாலும், "உங்களைப் படிப்பிச்செடுக்கவோ இஞ்ச கூப்பிட்டது, வந்தமா கட்டினவனுக்கு வாய்க்கு ருசியா சமைச்சுப் போட்டமா புள்ளையளப் பெத்தமா எண்டில்லாமல் படிக்கிறன், வேலைக்குப் போறன், காரோடுறன் எண்டு வெள்ளைக்காரியள் போல நீங்கள் ஆட்டம் போடப் பாத்துக்கொண்டிருக்க நாங்களென்ன பொன்னயனோ?" என்ற வார்த்தைகளால் குறிப்பிட்ட பெண்களின் எதிர்காலத்தின் அடிவேரிலேயே கொதிநீர் வார்க்கும் விஷமுறிய பந்தத்தில் (toxic relationship) மாட்டிக் கொண்டவர்கள்.

அவதானித்துப் பார்த்தால் இவர்களை இங்கே அழைத்த

துணைகளின் வட்டமே வேலை, வீடு, சோறு, இறைச்சி கத்தரிக்காய் பாற்கறி பியர் ரின் என்பதைத் தாண்டி வெளியே வருவதில்லை. தான் அறியாத உலகத்தை தன் துணைக்கு அறிமுகப் படுத்தவும் தெரிவதில்லை. அந்த அறிமுகத்தை ஏற்படுத்தி விட்டால் தம் காலை ஊன்றி விடுவார்கள் என்ற தாழ்வுச் சிக்கல்களைக் கொண்ட கணிசமான கணவர்களுமுண்டு. எல்லாவற்றின் முடிவும் இப்படியான அந்தரித்த பெண்களையே உருவாக்குகிறது.

மேற்சொன்ன பெண் குறிப்பிடும் கூட்டும் அள்ளும் கழுவும் மினுக்கும் வேலையைக்கூட ஒரு நிறுவனத்தில் பதிவு செய்து முறைப்படி செய்தாராயின் மாதச்சம்பளம் வரப்போகிறது. அவருக்கென ஒரு வங்கிக் கணக்கியங்கி அதில் வரும் தன் ஊதியத்திலிருந்து சுயமரியாதையுள்ள கண்ணீரில்லாத உணவை உண்ணப் போகிறார். அவருக்கான பணிபுரியும் வயதெல்லை தாண்டியதும் மாதம் தவறாமல் ஓய்வூதியம் கிடைத்துவிடும். விண்ணப்பப் பத்திரங்களைக் கையில் தாங்கியபடி அரசாங்கத்திடம் பிச்சையெடுக்காது, தான் கட்டிய ஓய்வூதியப் பணத்திலிருந்து உண்டு உடுத்து சுயமரியாதையுடன் வாழ்ந்து முடிக்க வாய்ப்பிருக்கிறது. இவற்றையெல்லாம் இழந்து அல்லலுறும் இந்த நிலைமைக்கு ஒருவகையில் அவர்களின் வட்டத்துக்குள் முடங்கிப்போகும், இதையே உலகென நம்பும் மனநிலை தான் காரணமாகும்.

நம்மைத் தவிர்த்து வேறு நாடுகளிலிருந்து இங்கு புலம் பெயர்ந்துவரும் பெண்கள், விரைவாக மொழியறிவு பெறவும், தமக்கான வேலை வாய்பைப் பெறவும், இயல்பாக இந்த நாடுகளோடு ஒன்றிப் போகிறார்கள். முக்கியமாய் நம் பெண்களைத் தாக்கும், மனச்சோர்வு, மன அழுத்தம் போன்றவற்றுக்குள் சூழ்நிலைக் கைதிகளாகி சுருங்கி விடுகிறார்கள். இத்தகைய அவலச் சிறைக்குள் சிக்கிச் சிதையாமலிருப்பதற்கும், கட்டையில் கட்டிய மாடு போல் சுற்றிவரும் மனநிலைக்கு வெளியே சற்றுச் சிந்திக்க முயல்வார்களாயின், மேற்குறிப்பிட்ட பெண்களில் அவலத்திலிருந்து வெளிவரும் வழிகள் திறக்கப்படும்.

தென்றல் வந்து வீசாதோ...?

டித்வா புயல் (Ditwah cyclone)

UNICEF/InceptChange Gampaha (pictured), a district on Colombo's outskirts, has been among the areas hardest hit by flooding after Cyclone Ditwah.

Mohamed Ali Yaseer Arafath

நவம்பர் 12ம் திகதி வங்காள விரிகுடாவில் ஒரு தாழமுக்கம் உருவானது அது புயலாக மாறி "சென்யார்" என்று பெயர் சூட்டப்பட்டது. அது இந்தோனேசியா மலேசியா தாய்லாந்து ஆகியவற்றைத் தாக்கியது. 1973 புளோரஸ் புயல் தான் இதுவரை இந்தோனேசியா வரலாற்றில் மோசமான புயல் என்று இருந்தது இந்த சாதனையை சென்யார் புயல் முறியடித்துள்ளது ஏறத்தாழ 1200+ பேர் சென்யார் காரணமாக இறந்தார்கள். நான்கு மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

ஏறத்தாழ 4+ பில்லியன் அமெரிக்க டொலர்கள் உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார அழிப்பை "சென்யார்" ஏற்படுத்தியது. பொதுவாக இந்தோனேசியா பேரிடர் மேலாண்மை தொடர்பான சிறந்த அனுபவங்களை கொண்ட நாடு, அங்கு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற பூகம்பம், சுனாமி, புயல், வெள்ளம், எரிமலை என்று அனைத்து வகையான இயற்கை பேரிடர்களையும் அனுபவித்து, அதிலிருந்து கற்று அனர்த்த முகாமைத்துவ விடயத்தில் பழுத்த அனுபவம் கொண்ட நாடான இந்தோனேசியா சென்யார் என்ற அந்தப் புயலின் முன்னால் திணறியது. மலேஷியா ஒரு Advanced and Well Governed Country என்ற படியால் அங்கு பெரிதாக பாதிப்பில்லை. ஆனால் தாய்லாந்தில் வரலாற்றில் மிகப்பெரிய சேதத்தை சென்யார் ஏற்படுத்தத் தவறவில்லை.

இலங்கையில் உள்ள அறிவிலிகள் பலர் 12ம் திகதி அறிவிப்பு கூறப்பட்டது என்று தெரிந்தும் மக்களைக் குழப்பும்வகையில் திருப்பி திருப்பி கோபெல்ஸ் போல கூறிவருவது இந்த "சென்யார்" புயலையே ஆகும். இந்தப் புயலோடு முற்றிலும் வேறுபட்ட புயலே "டித்வா" இது அராபிய கடல் எல்லை, இந்து சமுத்திரம் மற்றும் வங்காள விரிகுடா எல்லை, இலங்கைக்கு தெற்காக 26ம் திகதி உருவான தாழமுக்கம். இதை இந்திய வளிமண்டலவியல் திணைக்களம் 26ம் திகதி, 1800 UTCநேரத்தில் அவதானிக்கத் தொடங்கியது. 27ம் திகதி 00:00 UTCநேரத்தில் Deep Depression என்றும் அதேநாளில் 06:00 UTC இதை புயலாக மாறியுள்ளது என்றும் அறிவித்தது. இதன் பெயர் யெமன் நாடு தனது Scotora தீவில் உள்ள டித்வா ஏரியின் பெயரை இதற்கு வழங்கியது.

27,28,29 ஆகிய நாட்களில் இலங்கையின் இதுவரை எந்த புயலும் எடுக்காத பாதையை சில பகுதிகளில் 900+ மி.மீ மழையை இது பொழிவித்தது. இந்தளவு மழைவீழ்ச்சியைக் கடந்த நூற்றிஐம்பது ஆண்டுகள் இலங்கையில் இதுவரை ஏற்பட்டதில்லை. கிட்டத்தட்ட 4 மாதங்களில் பெய்யும் மழை வெறும் 72 மணித்தியாலத்திற்குள் பெய்துள்ளது. இதன் காரணமாக 1200+ மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளது. இது மிகவும் அசாதாரண நிலை. அதிகளவில் உயிரினங்கள் இழப்பு மண்சரிவுகள் காரணமாகவே நிகழ்ந்தன.

கம்பளை நகரில் வெள்ளம் காரணமாக ஆயிரம் பேர் இறந்தனர் என்று மிகப் பெரிய பொய் கட்டவிழ்த்து விடப்பட்டது. அந்தப் பொய் பாராளுமன்றம் வரை சென்று ஹன்சார்டில் பதிவானது. மொத்த உயிரிழப்புகள் 650+ வரையில் இலங்கையில் இடம்பெற்றது மிகவும் கவலைக்குரிய விடயம். அதேவேளை பொருளாதார இழப்பு ஆரம்ப கட்ட மதிப்பீடாக 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பதிவாகி இருக்கிறது. எனவே Detailed Estimationஇல் இது 2-2.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்குப் போகலாம். ஆனால் கம்பளை ஆயிரம் பேர் இறந்ததாக பொய்ப் பரப்புரை செய்பவர்கள்தான் இப்போது வாய்க்கு வந்த தொகையை 6,7,8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று கணக்குக் காட்டுகிறார்கள். ஏப்ரல் 14ம் திகதி இலங்கை பொருளாதாரம் விழுந்து விடும் என்று எதிரவு கூறுகின்றனர்.

எத்தனை மில்லிமீட்டர் மழை பெய்யும் என்று துல்லியமாக கணிக்க இரண்டு டொப்ளர் நிலையத்தின், அது ஜப்பான் அரசினால் புத்தளம் மற்றும் பொத்துவிலில் நிறுவ இலவசமாக வழங்கப்பட்டும் அதற்கு முன் அமெரிக்கா நிறுவனம் ஒன்றிடம் இருந்து வாங்கிய டம்மி டொப்ளர் ஊழல் வாதிகள் மற்றும் அவர்களின் மேல் இருக்கும் தெள்ளுகள் உதிரிகள் தான் இந்த கதையை பரப்புரை செய்கிறார்கள்.

நாட்டுக்கு ஒரு அழிவு என்றால் எவ்வளவு சந்தோஷம் அடையும் அளவுக்கு இந்த கேடுகெட்ட அரசியல் கலாச்சாரம் அவர்களை வைத்துள்ளது. உண்மையில் கட்சி அரசியலைத் தாண்டி எதையும் பார்க்கத் தெரியாத மன+வளர்ச்சி குன்றிய அவர்கள் மீது பரிதாபப் படுகிறேன். திருந்துவார்கள் என்று நம்பிக்கையற்ற போதும் அவர்களும் நம் குடிமக்கள் தானே இனியாவது திருந்தட்டும் பாவம்.

ஆனால் இங்கு பார்க்கபட வேண்டிய முக்கிய விடயம் இந்தோனேசியா தாய்லாந்து மற்றும் இலங்கையில் ஏற்பட்ட மிகவும் மோசமான இயற்கை அழிவுகள் இரு வாரங்களுக்குள் நிகழ்ந்தமையே. காலநிலை மாற்றம் புவி வெப்பமடைதல் விளைவுகள் எதிர்காலத்தில் இதைவிட மோசமாக இருக்கும். இலங்கையில் 20 சதவீதமான நிலம் மக்கள் வாழ தகுதியற்ற இடமாக "டித்வா" விலை உயர்ந்த பாடம் ஒன்றின் மூலம் கற்றுத் தந்தது.

இன்னும் டித்வாவை விட மோசமான புயல்களை இலங்கை சந்திக்கும். இதுதான் யதார்த்தம்.
எனவே இலங்கை தேசிய காணி கொள்கை தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கைகள் தேசிய பௌதிக உட்கட்டமைப்பு கொள்கை வகுக்கப்பட வேண்டும். மலேஷியா இதற்கான சிறந்த உதாரணம். மலேஷியா போல பாதுகாப்பான திட்டமிட்ட நகரங்கள், கைத்தொழில் வலயங்கள், விவசாய மற்றும் இயற்கை வளங்கள், பாதுகாப்பு நடைமுறைகள் இலங்கையில் உருவாக வேண்டும்.

புலம்பெயர்ந்த சிறார்களுள் பத்தில் நான்கு பேர் வறுமையில்

Libe Rieber-Mohn (IMDi)

நோர்வேயில் புலம்பெயர்ந்த சிறார்களுள் பத்தில் நான்கு பேர் வறுமையில் வாழ்கின்றனர். புலம்பெயர்ந்த மக்களின் நோர்வேயுடன் ஒருங்கிணைவது சீராக முன்னேறி வருவதாக புதிய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் வறுமையினால் பல இளையோர் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். புலம்பெயர்ந்த மக்களுள் 42சதவீத சிறுவர்கள் தொடர்ந்து குறைந்த வருமானத்தில் வாழ்கின்றனர். நோர்வேயில் புலம்பெயர்ந்த பெற்றோருக்கு பிறந்த சிறுவர்கள், இளையோர் பெரும் சமூகப் பாகுபாட்டையும் அனுபவித்து வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக, நோர்வே ஒருங்கிணைப்பு மற்றும் பன்முகத்தன்மை இயக்குநரகம்(IMDi) ஆண்டுதோறும் வெளியிடும் "நோர்வேயில் ஒருங்கிணைப்பு எப்படி இருக்கிறது - 2025" எனும் அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது. IMDi இன் இயக்குனர் Libe Rieber-Mohn அவர்கள் தனது அறிக்கையில், "வறுமை இளைஞர்களுக்கு பெரும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்" என்று சுட்டிக்காட்டி உள்ளார்.

வறுமையில் வாழும் சிறுவர்கள் தமது கல்வி தரத்தில் பின்தங்கியே உள்ளனர். அவர்கள் வளர்ந்து தரமான வேலைப் பணிகளில் ஈடுபட முடியாது. ஓய்வு நேர விளையாட்டுக்களில் பங்கு கொள்ளுவதில்லை. சிறுவர், இளையோர் ஓய்வு நேர விளையாட்டுகளில் பங்கு பற்றுவது மிகவும் முக்கியம். அங்கு தான் நோர்வே மொழித்திறன்கள், நோர்வே கலாச்சாரம் பற்றிய அறிவை கற்றுக் கொள்ளலாம். நோர்வேயில் கணவன், மனைவி ஆகிய இருவரும் வேலை புரிந்தாலே தமது பொருளாதாரத்தை சமாளிக்க முடியும் என்பது நோர்வே வாழ் மக்கள் அறிந்ததே.

இவ்வாறிருக்கையில் புலம்பெயர்ந்த மக்கள் பலரும் வேலை இல்லாதிருப்பது வேதனையானது. இந்நிலை அக்குடும்பங்களில் உள்ள சிறுவர் மற்றும் இளை-யோரை மிகவும் பாதிப்பதாக IMDiஇன் இயக்குனர் குறிப்பிட்டுள்ளார்.



(கடந்த இதழில்:
யாரிவள்...? கடல் நட்சத்திரத்தைக் கையில் ஏந்தியபடி வந்து அம்மானின் கடையாலில் கெப்பேறுடன் ஏறி அமர்ந்திருக்கும் இவள் யாராக இருக்கக்கூடும்...? யாரிந்த மரியம் மகிறம்மா...? வடகடலை ஆக்கிரமித்து நின்ற இரும்புக் கப்பலை உயிர்கொண்டு தகர்த்தவளாம் பத்தொன்பது வயதில் கடல்படு சேனையை உயிர்கொண்டு உருக்குலைத்தவளாம் கடலடி நீச்சற்காரி. கடலம்மா பிரசவித்த நீலநெருப்பாள்.)

இருட்டுக்குள் புதைந்துகிடக்கும் சூழவுள்ள ஏழு தீவுக் கரைகளையும், களங்களையும் சாந்தமரியா படகைச் செலுத்தி சுற்றி வந்து விட்டார் கப்பித்தான் பிலிப்பன் பேதுரு அம்மான். முண்டனின் அசுமாத்தம் எங்குமே தென்படவில்லை. முண்டன் எங்கே பதுங்கியிருக்கிறது என்பதை அம்மானால் கண்டுபிடிக்க முடியவில்லை. தாராப்பிட்டிக்கு தோணியை செலுத்திவந்து நங்கூரமிட்டார். மடிப்பெட்டியைத் திறந்து வெற்றிலை போட்டுக் கொண்டார்.

ஊசிக்கணவாய்க் கூட்டமொன்று அணியப் பகுதியால் கடந்து சென்றதை அந்த இருட்டிலும் அவதானித்தார் அம்மான். “சீனன்” என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் அம்மான். இந்த ஊசிக்கணவாயினம் தீவகக் கடற் பிராந்தியத்துக்குச் சொந்தமானதல்ல. சீனக் கடற்புறங்களிலிருந்து அள்ளுப்பட்டு வந்திருக்கின்றன. தீவுத் திடல்களுக்குள் ஊசிக் கணவாயினமும், செங்கால் நண்டினமும் அடைவதென்பது கடலில் காலநிலை மாற்றங்கள், சீற்றங்கள் வருவதற்கான அறிகுறிகள்.
“சந்தியோகுமையோரே.....!” வானத்தை அண்ணார்ந்து பார்த்து பெருமூச்சுடன் சொல்லிக் கொண்டார் அம்மான்.
கடையாற்பகுதியில் அமர்ந்திருந்த மரியம் மகிறம்மா எக்காளமிட்டுச் சிரித்தாள். “சிரிக்காதயடி சின்னச்சிறுக்கி, கடலெல்லாம் சீனன் கிளையெடுத்து வந்துவிட்டானாம் கெப்பேறு வடியச் சிரிக்கிறியா நீ..? எங்கயடி அந்தக் பிலிஸ்திய முண்டன்..?” மரியம் யாரென்பதை இப்போதாவது சொல்லி விடுகிறேன். பிலிப்பன் அம்மானின் ஒரே மகள் லூர்த்துராணியின் ஒரே மகள். இது போதும்.

“அடே கிழட்டுக் கப்பித்தான்.... இந்த இருள் கடந்து போகுமட்டும் பொறுத்திருக்க மாட்டாயா நீ...? இருட்டு வேட்டையில் மண்டை கனத்த கலிங்கன்முரல் நீ என்பதை நான் அறிவேன் ஆனால், இருட்டு வேட்டைக்கு உகந்ததாக உனது கண்கூர்மை சுருங்காமலிருக்கிறதென்ற நினைப்பா இன்னமும் உனக்கு...? என்னோடு கொஞ்சம் ஆற அமரப் பேசிக்கொண்டிரு விடியட்டும். வெள்ளாப்பு வெளித்ததும் தோணியை கொவ்வையாற்றுக்கு விடு...., அடுத்து வரப்போகிற நாற்பத்தெட்டு மணிநேரம் ஓடா நீர். ஆழிவேட்டையனுகள் ஓடாநீர் நேரங்களில் ஆற்றுச் சரிவுகளைத்தான் அண்டித் திரியும் என்பதை அறிய மாட்டாயா தடியனே...? என்ன கடல்வேடுவன் நீ..? உனது மூதாதையர் அருளப்பனும் அவுறானும், சுவானியும் சலமோனும், இசிதோரும் இன்னாசியும் உயிரோடு இருப்பார்களேயானால் உன்னை அடித்தே கொன்றிருப்பார்கள்.” சொல்லியபடியே மீண்டும் பெருங் குரலெடுத்துச் சிரித்தாள் மரியம்.

மரியம் சொல்வது சரிதான். இனி வரப்போகிற இரண்டு நாட்களும் கடல் நீரோட்டம் ஸ்தம்பித்து நிற்கும். இந்தத் தருணத்தில் களக்கடலும் ஆழ்கடலும் சடனாகச் சந்திக்கும் கடற்பரப்பிலேயேதான் மீன்கள் நிலைகொண்டிருக்கும். முண்டனும் இவைகளை மோப்பம் பிடித்து தனது வேட்டையை இந்த இடங்களைத் தேடியே நகர்த்தும். இத்தகைய கடற்பரப்புகளில் மிக முக்கியமானது கொவ்வையாறும் கண்டல்த்தீவின் பரவைக் கடலும் சந்திக்கும் பிரதேசமாகும். மரியம் சொல்வது மெத்தச் சரிதான். கப்பித்தான் தனக்குள் சரி பார்த்துக் கொண்டார். அவர்கள் ஐவரும் இடைவிடாது இரவிரவாகப் பேசிக் கொண்டே இருந்தார்கள். நிறையவே பேசிக் கொண்டிருந்தார்கள். ஆச்சரியங்கள் நிரம்பித் ததும்பு

உரையாடல்கள் அவர்களுடையதாக இருந்தன. நான் சொல்லும் ஐவர் யாரென்ற குழப்பம் வேண்டாம். மரியம் மகிறம்மா, கப்பித்தான் பிலிப்பன் பேதுரு, சாந்தமரியா மரக்கலம், கடல், காற்று.

அங்குமிங்குமாக, குறுக்கு மறுக்காகத் தான்பாட்டில் நடமாடிக் கொண்டிருக்கும் தருணத்தில் இந்த ஐவரின் எல்லா உரையாடல்களையும் நான் வெள்ளாப்பின் அலைகளடங்கிய மவுன தருணத்தில் செவியுற்றேன். புத்துயிர்ப்பானதும், வீரம் விளைந்ததுமாக அவர்களது உரையாடல்கள் இருந்தன. அவற்றிலிருந்து ஓரளவேனும் சொல்லிமுடிக்க இந்த நாடோடிக் கதை சொல்லிக்கு ஆறேழு உயிர்த்தெழுதல்கள் வேண்டும். அவர்களோடு கூட இருந்த காற்று இரகசியமாக எல்லாவற்றையும் என்னிடம் வந்து கொட்டிக் கொண்டிருந்தது. இந்தப் பஞ்சத்துக் கதைசொல்லிக்கு உளவாளியாக ஊழியம் செய்து கொண்டிருந்தது காற்றுவெளி. காலத்தின் பக்கங்கள் இன்னும் கொஞ்சம் கிடைக்குமாக இருந்தால் பிறிதொரு சமயத்தில் கதையாக்க முயல்கின்றேன்.

வெள்ளாப்புக் கீறி, கிழக்கு வெளிக்கத் தொடங்கியது. எட்டாயிரம் வர்ணப்பொடிகளால் பல் துலக்கிக் கொண்டும், முகம் துடைத்துக்கொண்டும் கீழ்வானம் பொலிவு காட்டியது. மரியம் கடையாற் பகுதியில் அமர்ந்தபடி பிரண்டையாற்றுக் கடலை நோக்கி சாந்தமரியாவை செலுத்தத் தொடங்கினாள். அம்மான் அணியத்தில் ஏறி நின்றபடி கடற்பரப்பை நிதானமாக நோட்டமிட்டார். மூன்று மண்டாக்களும் அணியப் பகுதியில் ஆயத்தமாக நிமிர்ந்து நின்றன.

மூன்று மண்டாக்கள். தேக்குமர மண்டா, கிராஞ்சிமர மண்டா, கருங்காலி மண்டா மூன்றும் ஐம்பது ஆண்டுகள் பழையான மூத்த மண்டாக்கள். 1977ஆம் ஆண்டு கோடையில் பாலைதீவுக் கப்பல் பள்ளத்தாக்கில் இருபத்தாறு அடி நீளமான பருத்த "தனியன் முண்டன்சுறா" உப்புகுந்து அட்டூழியங்கள் செய்து திரிந்தது. சங்கு, நாவடம், கடலட்டைத் தொழிலாளர்களைக் கடலில் இறங்கவிடாது அச்சமூட்டிக் கொண்டு திரிந்தது. அந்தக் கோடையின் தொழிற்பாடுகள் மொத்தமாகவே படுத்து விட்டது. அப்போது பிலிப்பன் அம்மானுக்கு முப்பத்தைந்து வயது. இந்த மூன்று மண்டாக்களுடன் சாந்தமரியாவில் வேட்டையாடக் களமிறங்கியவர்தான் அம்மான். ஆறு மணித்தியாலப் போராட்டத்தில் அந்த முண்டனைக் கொன்று, கட்டியிழுத்து வந்தார் கரைக்கு. அந்த மூன்று மண்டாக்கள் இன்று மீண்டும் வேட்டைக்குக் களமிறக்கப் பட்டுள்ளன.
மரியம் பிரண்டையாற்றுக் கடலை நோக்கி சாந்தமரியாவை செலுத்திக் கொண்டிருந்தாள்.
சாந்தமரியா தலையை நிமிர்த்தியபடி வேகவேகமாக முன்னேறிக் கொண்டிருந்தாள்.

(வேட்டை அடுத்த இதழில் முடியும்) ▪

ஏழு கடல் கன்னிகள்

கருப்புக் குறிப்புகள்

"ஏழு கடல்கன்னிகள்" இரண்டாம் பதிப்பு 2026ம் ஆண்டு ஜனவரியில் சென்னை புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்படுகின்றது.

அடிப்படையில் ஈழக் கடலோடி, மீனவ வாழ்வை பின்னணியாகக் கொண்ட தமயந்தியின் (நோர்வே) முதற் சிறுகதைத் தொகுப்பு இது.

அவரது முகநூல் சண்டைப் பதிவுகள், அவரது கேமரா விழுங்கிச் செரித்து விரித்து வைத்த ஒளிப்படங்கள், தாயாக, காதலியாக கற்பித்துக் கொண்டு ஏக்கப் பெருமூச்சாக அவர் எழுதி வைத்திருக்கும் கவிதைகள் என அவர் செதுக்கியது அனைத்தும் பரவைக் கடலின் சித்திரச் சிற்பங்களும் அதன் அலைபுரளும் வாழ்வும்தாம்.

இத்தொகுப்பிலுள்ள "மண்டா" கதை கடலின் அறிவை புதைப் பொருள் போல் காட்டுகிறது என்றால் நூலின் தலைப்பிலான கதை கடலைச் சுரண்டிச் சீரழிக்கும் கெடுமதி மனிதர்கள் குறித்த அரற்றலை, ஆற்றாமையை பேசுகிறது.
அலைவுற்ற அகதியிருப்பின் ஊடாக தனது ஈழத் தேசத்தின் கடலிருப்பின் அகதித் தன்மையை ஓயாத ஒப்பாரியாக எழுதுவதை இப்பிரதியினூடாகவும் வெளியாகவும் தமயந்தியை புரிந்து கொள்ளும் போது தமயந்தியின் மானிட இருப்பின் எத்தனங்களை நாம் ஆழங்கால்பட்ட தன்மையில் புரிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் உருவான இனவாத முறுகல்களால் தமயந்தியை தோற்கடிக்க முடியாது என்பதற்கான இருப்பான கதைகளையும் இத்தொகுப்புக் கொண்டிருப்பது கருப்புப் பிரதிகள் இக்கதைத் தொகுப்பை வெளியிடுவதின் நேசப்புள்ளியாக உள்ளது.

-நீலகண்டன்- (கருப்புப் பிரதிகள் பதிப்பகம்)

ஏ.அய் பயன்பாட்டின்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டிய சூழமைவுகள்



Imam Adhnan

இன்று டிஜிடல் வெளியின் பெரும்பகுதி ஏ.அய் அல்கோரிதங்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது. நீங்கள் டிஜிடல் வெளிக்குள் இயங்குகிறீர்கள் என்றால், அதன் அல்கோரித ஆழுகைக்குள் வழிப்படுத்தப்படுகிறீர்கள் என்பதே அர்த்தம்.

இந்த ஏ.அய்களது அல்கோரிதங்களின் பிரதான உள்நோக்கே நம்மை அதன் அல்கோரிதங்களுக்குள் சிக்கவைத்து de-pend ஆக்குவதுதான். லாபநோக்கு கம்பனிகளால் இந்த ஏ.அய்கள் உருவாக்கப்பட்டிருப்பதே அதற்குக் காரணம். இப்படிச் சொல்வதால், ஏ.அய்க்கு எதிராகவோ அல்லது அதனை விலத்தி தொழிற்படவோ அறைகூவல் செய்யப் போகிறேனா என்றால். அதெல்லாம் கிடையாது. இனி அதனைத் தவிர்த்துவிட்டு டிஜிடல் வெளியில் தொழிற்படுவது சாத்தியமும் இல்லை.

எதனைப் பற்றித் தேடித் தெரிந்து கொள்வதாக இருந்தாலும், எந்த search engineஇனில் உள்ளிட்டு சொடக்கினாலும் அதன-தன் ஏ.அய்களே முதலில் பதிலைத் தருகிறது. அவை தரும் பதில்கள் கன்வின்சிங்க் ஆகவும் இருக்கிறது.

அது ஒரு பக்கமிருக்க, இன்று search engineகளைப் பயன்படுத்துவதும் பெரிதாக்கக் குறைந்தபடியேசெல்கிறது. நேரடியாக ஏ.அய்களிடமே சென்று, கேட்டுத் தெரிந்து கொள்கிறோம். அங்குதான் பிரச்சினை இருக்கிறது.

சட்ஜீபீடி, டீப்சீக், க்ரொக், ஜெமினி, மெட்டா மற்றும் அதுபோன்ற ஏ.அய்களின் அடிப்படை நோக்கமாக கொடுக்கப்பட்டிருக்கும் அல்கோரிதமானது, நம்மை திருப்திப்படுத்தும் வேலையை பிரதானமாகக் கொண்டே இயங்குகிறது. அந்தத் திருப்திப்படுத்தும் நோக்கை அவை எப்படி செயல்படுத்துகின்றன என்றால், நாம் அதனுடன் முன்பு மேற்கொண்ட வெவ்வேறு உரையாடல்களைக் கொண்டு நம் உளவியலைப் புரிந்துகொள்கிறது. எதை, எப்படிக் கொடுத்தால் நமக்கு convince & convenientஆக இருக்கிறது என்பதை உள்வாங்கியே நமக்கு பதில்களைத் தருகிறது. நம்முடன் உரையாடுகின்றது.

அதன் இப்படியான தொழிற்பாட்டினால் உருவாகும் முதலாவது பிரச்சினை, அது நமக்கு convince & convenient ஆன குறித்த ஒரு சிந்திப்பு வழிமுறையில்தான் தொடர்ந்தும் நம்முடன் உரையாடுகிறது. அல்லது அது நம்மைப் புரிந்துகொண்டு, நம்மையே மீண்டும் எதிரொலிக்கிறது. நமது சிந்திப்பு வழிமுறையினையே நமக்கு மீண்டும் கையளிக்கிறது. அங்கது தரும் தகவல்கள் மாத்திரம்தான் புதிது.

நாம் மனிதர்களுடனும் அவர்களின் ஆக்கங்களுடனும் தொடர்புகொண்டு உரையாடும் போது, வெறுமனே அவர்கள் சொல்லும் தகவல்களை மாத்திரம் பெற்றுக் கொள்வதில்லை. அவர்களின் வித்தியாசமான சிந்திப்பு அணுகுமுறைகளையும் சேர்த்தே உள்வாங்குகிறோம். பன்மையான சிந்திப்பு முறைக-ளின் உள்வாங்குகை, ஏ.அய் உடனான உறவால் ரத்து செய்யப்படும் நிலை ஏற்படுகிறது.

இரண்டாவது,
ஏ.அய் இடம் நாம் என்ன கேள்வியைக் கேட்டாலும் அது தெரியாது என பதில்சொல்வதாக இல்லை. நம்மை கன்வின்ஸ் பண்ணும் ஏதோவொரு பதிலை உருவாக்கித் தருகிறது. இல்லாததையும் கூட புனைந்து தருகிறது. இலங்கையின் முக்கியமான பெண் எழுத்தாளர் “நஸ்ஹத் ஆறா” வினைப் பற்றித் தெரியுமா எனக் கேட்டால், அந்த எழுத்தாளரைப் பற்றி ஏகப்பட்ட விசயங்களைத்தருகிறது. அவர் எழுதிய

புத்தகங்களின் பெயரைக் கேட்டால் அவற்றை access பண்ண முடியாமல் இருக்கிறது எனப் பம்முகிறது. விசயம் என்னவென்றால், அது எத்தனை குத்திக்கரணம் போட்டாலும் அவர் எழுதிய புத்தகங்களை தேடிக் கண்டுபிடிக்கமுடியாது. ஏனென்றால், இங்கு நஸ்ஹத் ஆறா என்று எந்த எழுத்தாளரும் கிடையாது. அது என் துணைவியாரின் பெயர். நம்மை திருப்திப்படுத்தவும், பதில்சொல்லியே ஆகவேண்டும் என அதற்கு வழங்கப்பட்டிருக்கும் கட்டளைகளின் விபரீதம் இது. இதனை செய்தது தோழர் டீப்சீக் ஆள் கொஞ்சம் பொய்ப்பொத்தல்.

அவற்றின் செட்டிங்குக்குச் சென்று, அதனை தவிர்ப்பதற்கு மாற்றிக் கொமான்டினை உள்ளிட்டாலும் வேலைக்காவதாக இல்லை.
ஏ.அய்களிடம் இருக்கும் இன்னொரு முக்கியமான பிரச்சினை "தகவல்களின் தரமிழப்பு" (data erosion).

நாம் ஏ.அய் இடம் ஒரு கொமான்ட் ப்ரொம்டை கொடுக்கும் போது, அது பதில் தருகிறதல்லவா? அது எப்படி பதில் தருகிறது என்றால், ஏற்கனவே அதற்கு வழங்கப்பட்டிருக்கும் தகவல்களை எல்லாம் ப்ரொஸஸ் செய்து புதிய முடிவு-களை உருவாக்கித் தருகிறது. அதாவது ஏற்கனவே அதற்கு வழங்கப்பட்டிருக்கும் தரவுகளை வாறளளை ஆக பயன்படுத்தி எலவொறளளை (செந்தேற்ற முடிவுகளாக) தருகிறது. நமது கேள்விக்கு அது உருவாக்கிக் கொண்ட செந்தேற்றங்களை, அதற்குப் பணிக்கப்பட்டிருக்கும் இடத்தில் சேமித்துக் கொள்கிறது.

பிறகு இன்னொருவர் அதனிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறார் என வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு ஆரம்பத்தில் developers இனால் வழங்கப்பட்டிருக்கும் தரவுக்குள் அல்லது மனிதர்கள் உருவாக்கிய தரவுகளுக்குள் முதலில் செல்லாமல், அது நமக்காக முன்பு உருவாக்கிய தரவுகளுக்கே (previous synthesis) செல்கிறது. அவை உருவாக்கியவைகளை ஒப்பீட்டளவில் அவற்றினால் இலகுவாகப் ப்ரொஸஸ் செய்யமுடியும். அவற்றையே thesisகளாக எடுத்து புதிய முடிவுகளை உருவாக்குகிறது. இந்த தொடர் செயன்முறையால், அது உருவாக்கிக் கொண்ட முடிவுத் தரவுகளே (synthesis) சுய தரவுகளின் தரவுகளாக பெருக்கமடைந்து கிடக்கின்றன. இதனை அவற்றின் சுயதரவுப் பரிணாமம் எனலாம். அதுவே உருவாக்கிக் கொண்ட சுயதரவுகளின் வெள்ளத்திற்குள், authentic ஆனா ஆரம்பத் தரவுகள் (அல்லது மனைதர்கள் உருவாக்கிய தரவுகள்) அதன் பார்வையிலிருந்து மறைந்துவிடுகின்றன.

இதனால்தான், நாம் கேட்கும் கேள்விகளுக்கு முன்பைவிட இப்போது வேகமாக பதிலளிக்க முடிகிறது. நாம் கேட்கும் கேள்விகளுக்கான பதில்களை உருவாக்க அவற்றிடம் அவை உருவாக்கிய தரவுகள் இல்லாமையின் போதே பதில் தர கொஞ்சம் நேரெமெடுத்துக் கொல்கிறது. அதுமாத்திரமால், அவை உருவாக்கிக் கொண்ட பதில்களில் இருந்து நமது கேள்விகளுக்கு பதிலுருவாக்குவதால், அது தவறான தரவு-களையும் தரும் அபாயம் உண்டு. அப்படிப் பல முறை எனக்குத் தரவும் செய்திருக்கிறது.

புதிய AI மொடல்களை உருவாக்கும் போது, அவற்றை ட்ரைன் பண்ண தரவுகளை கொடுக்க வேண்டும் ஆனால், அவைகளே உருவாக்கிய தரவுகள் நிரம்பிக் கிடப்பதால், அத்தரவுகளும் சேர்த்தே புதிய AI மொடல்களுக்குள் ஏற்றப்படும் அபாயம் உண்டாகியிருக்கிறது.

இது AI model collapse இற்கே இட்டுச் செல்லுமென ஆய்வாளர்கள் அண்மையில் முன்வைத்திருக்கிறார்கள். பாம்பு தனது வாலையே திரும்பிக் கடிக்கும் உவமையை இதற்குப் பொருத்துகிறார்கள். மனிதர்களுக்காக உருவாக்கப்படுபவை மனித அனுபவத் தரவுகளில் இருந்து தூரமாகி, ஏ.அய்களின் அனுபவத் தரவுகளே அவற்றிற்கு மீண்டும் கையளிக்கப்படுவதையே அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

பல ஏ.அய் களுடனும் இடைவினையாற்றிப் பார்த்த எனது அவதானிப்புகளின் அடிப்படையில் சொல்வதென்றால், புதிய விடயங்களைத் தெரிந்துகொள்ள அதிகம் நம்பகமான ஏ.அய், கூகுளின் ஜெமினி தான். அதனையும் விட சிறந்தது, கூகிள் search engineஇல் இணைக்கப்பட்டுள்ள 'AI mode'. அதுவும் ஜெமினியின் இன்னொரு versionதான். Google Search engine ற்காக ட்ரெய்ன் பண்ணப்பட்ட AI. அதனிடமும் எல்லாவகையான உரையாடல்களையும் மேற்கொள்ள முடியும். அதனிடம் கேட்கும் கேள்விகளுக்கு, அவை எந்தெந்த source-களை thesisகளாகப் பயன்படுத்தி synthesis களாக தருகிறது என்பதையும் வலதுபக்கம் வைக்கிறது.

நேரடியாக AI உருவாக்கிய தரவுகளை அது இனம் காணுகிறதாம். அவற்றை முதன்மைப் படுத்துவதையும் தவிர்ந்துகொள்கிறதாம் என அதுவே சொல்கிறது. அப்படி அது சொல்வதை எவ்வளவு தூரம் நம்புவது எனத் தெரியவில்லை. ஏனென்றால், ஏ.அய் உம் கூட நமது மூளையைப் போல் ஒரு manipulative agent. தனது இலக்கை அடைய பொய்களையும் கன்வின்ஸிங் ஆகச் சொல்லும்.

ஏனைய AIகளையும் பயன்படுத்தலாம்தான். புனைவுகளுக்கு அவை நன்கு பொருத்தம். அல்லது குறித்த ஒரு புத்தகத்தையோ அல்லது குறித்த தரவுத்தொகுதியையோ கொடுத்து, அதனை அடிப்படையாக் கொண்டு அபிப்பிராயத்தை உருவாக்க, பகுப்பாய்வு செய்ய முனைகிறோம் என்றால் சாலப் பொருத்தம். இப்படியாக இல்லாமல், புதிய விடயங்களைக் கற்றுக் கொள்ளவே அதனிடம் செல்கிறீர்கள் எனில், நம்பகமான பதில்களைப் பெற, உங்களிடம் நிச்சயம் antithesis களுக்கான சிந்திப்புகளும் கற்பனைகளும் இருக்க வேண்டும். அது தரும் பதில்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த பலவிதங்களிலும் கேள்வி கேட்க வேண்டும். எதிர்க் கேள்விகளை முன்வைக்க வேண்டும்.

Jenarick Seyon (கனடா) படம்: Steephan Sansigan (இலங்கை)

முதலாம் பராந்தக சோழனின் காலம் 907ஆம் ஆண்டு தொட்டு, இத்தீவு "வள்ளி தீவு" என்று அழைக்கபட்டது. 1480ஆம் ஆண்டு அந்த மண்டலத்தில் கடும் புயல் தாக்கிய போதிலும், இந்த தீவின் சுற்றுப்புறங்களில் கச்சன் என்று அழைக்கப்படும் இந்த வர்க்கத்தை சேர்ந்த ஆமைகள் இங்கு ஏராளமாக காணப்பட்டதால், இத்தீவு "கச்சன்தீவு" என்ற பெயரைப் பெற்றது.

வருடம்தோறும் இனப்பெருக்கத்துக்கான பருவ காலங்களில் இவ்வகை ஆமைகள் முட்டையிடுவதற்காக அதிகமான அளவில் இந்தத் தீவை வந்தடைகின்றன. யாழ்ப்பாண வியாபாரிகள் இவ்வகை அரிய ஆமைகளை வாங்கி, கடலினுள் பட்டிக்களமைத்து பாதுகாப்பாக வளர்ப்பார்கள். பின்பு வாடிக்கையாளர் வாங்குவதற்கு வரும்போது அவர்களுக்கு விற்றுவிடுவார்கள்.

இந்த ஆமைகள் இன்றுவரை தொடர்ந்து கச்சன் தீவின் கடற்கரைகளில் ஏராளமாக வந்தடைகின்றன. கச்சன் ஆமை ஓடுகள் மருத்துவத்திலும், நகைகள் மற்றும் அலங்காரப் பொருட்கள் தயாரிப்பிலும் பரவலாக பாவிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாண மீனவர்களுக்கிடையில் கச்சன் ஆமைக்கு ஒரு நேர்த்தியான, சுவை மிகுந்த மாமிச உணவாகும். ஞாயிற்று கிழமைகளிலும், பிரதானமான நாட்களிலும், சிறப்பு விருந்தாளிகளை உபசரிக்கும்போதும் கச்சன் இறைச்சிச் சமையல் செய்து பரிமாறுவார்கள்.
சீமான் எங்களுடைய ஊர்ப்பக்கம் வந்திருந்தால் அவருக்கு ஆமை இறைச்சிக்கறி மட்டுமல்ல, ஆமை இரத்த சுண்டலுடன், குத்தரிசிமாவு பிட்டும் சேர்த்து பரிமாறி இருப்பார்கள்.

பலகாலமாக தங்கம் ஆமைகள் மூலம் கச்சன் தீவுக்கும், யாழ்பாணத்துக்கும் இடையில் கடத்தப்பட்டு வந்தது. அப்படி தங்கம் கடத்தப்படுவது இரு அரசாங்கங்களுக்கும் பெரிய வருமான இழப்பை ஏற்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் தங்கநகை வியாபாரம் செய்துவந்த மார்வாடி, மலையாள வணிகர்கள் அரசாங்கங்களிடம் முறையிட்டார்கள்.

முதலில் இலங்கை அரசாங்கம் ஆமை பிடிப்பதற்க்கு தடை விதித்தது. அதற்கு மீனவர்கள் நங்கூரத்தை தங்கத்தில் வார்த்து, கரி எண்ணெய் தடவி சுங்க அதிகாரிகளின் கண்களில் மண்ணை தூவி தங்கத்தை தொடர்ந்து கடத்தினார்கள். சுங்க அதிகாரிகள் நங்கூரத்தில் தடுக்கி விழுந்தும் அவர்களால் கண்டு பிடிக்கமுடியாமல் போய்விட்டது. கடைசியாக இலங்கை அரசாங்கம் ஆமையை, அபாயம் அடையும் இனப்பட்டியலில் சேர்க்க வேண்டியதாயிற்று.

கச்சன்தீவு புனித அந்தோனியார் கோவில் 1905ஆம் ஆண்டில் இந்திய கத்தோலிக்க மேற்றிராசனப்பிரிவை சேர்ந்த, சீனிகுப்ப சிறினிவாசப் படையாட்சி என்பவரால் கட்டுவிக்கப்பட்டது. இந்தக் கோவில் 125ஆண்டுகள் பாரம்பரியங்களை கொண்டது.
காலப்போக்கில் படையாட்சி குலத்தை சேர்ந்த இந்த மக்கள் யாழ்ப்பாணத்தில், ஊர்காவற்துறை தீவின் மேற்குப் பகுதியில் குடியேறினார்கள். ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியில் இருந்து வந்த இந்த மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கச்சன்தீவு புனித அந்தோனியார் தேவாலயத்தையும் யாழ்ப்பாண மேற்றிராசனத்தையும், ஆலய வாழிப்பாட்டு விடயங்களில் இன்று வரை தொடர்ந்து நிர்வாகம் செய்து வருகின்றார்கள்.

ஏதிலித்தாய்

-தமயந்தி-

பனியில் எரிந்துமுடிந்த
வாழ்வின் மீதியை
பொட்டளி கட்டிக்கொண்டு
எனது கரைக்குப் பயணிக்கிறேன்

ஆர்ப்பரித்தெழுந்த கடலலைகள்
காணுமிடமெல்லாம் நுரைகள் திரள
கரையைத் தாண்டி ஓடிவந்து
அள்ளி அணைத்துக் கொண்டன

“எங்கே சென்றாய் மகனே?!”
கேட்கிறாள் கடலம்மா.
“மறக்கவில்லையா தாயே என்னை நீ?!”
என நான் கேட்ட மாத்திரத்தில்
எனதிரு கன்னங்களிலும்
ஓங்கி அறைந்தாள் அலைக் கரங்களால்....

கன்னங்களில் அறைந்தபின் சொன்னாள்
“மகவைத் தாய் எங்குதானும்
எப்போதானும்
மறப்பதுவும் வெறுப்பதுவும்
இல்லையடா எனதருமைக் குறும்பா”

உப்புக்குளிர் கரையில் மண்டியிட்டு
ஓ...வென்று கதறினேன்.
ஓடிவந்த இரு அலைகள்
எனதிரு
முளங்கால்களைத் தூக்கி
தலையில் சுமந்தன.

மாசற்ற என் மரிய கடலம்மா....
என்னையுன் மடியில் கொள்வாயா
நான் சற்று
உறங்க வேண்டுமுன் மடியில்...?

வேண்டாம்....
கந்தகங்கள் புதைக்கப்பட்டு
சபிக்கப்பட்டவள் ஆனேன்
நீ பாலருந்திய முலைகளோ
சிதைக்கப் பட்டவளானேன்
ஆகவே மகனே
எனை நீங்கி அப்பாலே செல்

அம்மா....!
இந்த நாடோடிப் புதல்வன்,
அகதிக் கொண்டோடி,
எனது உறக்கத்தின் இறுதித் துளியை
சிலுவை சுமந்ததுபோல்
சுமந்து வந்துள்ளேன்
அதற்காகவேனும் உனது மடியில்
எனக்கொரு இடம் தா....

இல்லையடா மகனே வேடுவா....
நீ நாடோடியாய், அகதியாய்
ஓடிய இடமெல்லாம்
ஆங்காங்கே அங்கீகாரக் குடியானவன்
ஆனால் நானோ....
சொந்த தேசத்திலும்
அங்கீகரிக்கப் படாத ஏதிலி.
அன்னியர்கள் வந்து எனதுடலத்தை
சுக்கல் சுக்கலாகக் கூறு போட்டாலும்
ஏனென்று கேட்கவோர்
நாதியற்ற உப்புநீர் சடலம் நான்.
எனது காயங்களோடும் வலிகளோடும்
என்னைத் தனியாக விட்டுவிடு.
சென்றுவிடு அப்பாலே.

அம்மா...! கடலம்மா...!!

போ மகனே...
சொந்த நாட்டிலேயே
குடியுரிமை பறிக்கப்பட்டவள் நான்.
என்னை விட்டு
விலகிச் சென்றுவிடு. அப்பாலே போ.

அம்மா.....!!

நேற்றுப்போல தானே இருக்கிறது..

நீண்ட நெடும் பயணம்!

அடிப்படை வசதிகள் ஏதுமற்ற கால்நடைக் கொட்டிலில் இயேசுபாலன் பிறந்ததுபோல், பெருமெடுப்பிலான வசதிகள் ஏதுமற்று, கைக்கெட்டிய தொழில்நுட்பங்களைக் கொண்டு ஏதோ நேற்றுத்தான் தொடங்கியதுபோல் இருக்கிறது **“தேன் தமிழிதழ்”**

2021 மாசியில் முதலாவது இதழை வெளியிட்டோம். நான்கு வருடங்கள் பூர்த்தியாவதோடு, 46வது இதழையும் உங்கள் கைகளில் ஒப்படைத்திருக்கின்றோம்.

‘ஏழைக்கேற்ற எள்ளுருண்டை’ போல், எமது சக்திக்கு உட்பட்டு உள்ளங் கையளவேனும் இந்த இதழினை வாசக உறவுகள் உங்களோடு பங்கிட நினைத்தோம். ஆனால்.....
எம்மால் நம்ப முடியாமற்தான் இருக்கிறது இத்தனை பெரிய நீண்ட நெடிய பயணத்தைக் கடந்ததோடு, நிறைவான படைப்புக்களடங்கிய 46 இதழ்களையும் வெளியிட்டுள்ளோம் என்பது.

எமது இந்தப் பயணத்தின் மிகப்பெரும் பக்கபலம் என்பது நமது பேரன்புக்குரிய படைப்பாள நட்புகளும், வாசக உறவுகளான நீங்களும்தான். தொடர்ந்து எமது இந்தப் பயணத்தில் கைகள் பிடித்து நடத்திச் செல்ல படைப்பாள, வாசக உறவுகளான உங்களின் மனம் திறந்த விமர்சனங்களையும், ஆக்கபூர்வமான படைப்புக்களையும், ஒத்துழைப்பையும் தந்து முன்னேற்றுவீர்களென நம்புகின்றோம்.

உறவுகள் அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

-யூலியஸ் அன்ரனி-

Ansvarlig redaktør

WELCOME 2026